Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 304/2020 Date: 15.03.2024
Deposition of witness for prosecution: PW3 ( LW 7)
Defence:
Court:

| Name | திரு.நிவாஷ் | Caste | |
|---|---|---|---|
| Father Name | செல்லதுரை | Calling | பாரில் வேலை செய்து வருகிறேன் |
| Village | அனுமந்தன்பட்டி | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 28 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 15.03.2024 TIME 11.53 AM

எதிரி ஆஜர் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

1) கடந்த 09.01.2020ம் தேதி படம் பார்க்க சென்ற போது எனது அண்ணனுக்கு தியோட்டர் அருகே விபத்து ஏற்பட்டதாக காலை 9.00 மணியளவில் எனக்கு நண்பர் மூலமாக தகவல் தெரிந்து நான் கம்பம் அரசு மருத்துவமனை வந்து பார்த்தேன். அங்கு மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றதாக கூறினார்கள்.மதுரை அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது நெற்றி கண், மற்றும் மொட்டியில் காயம் இருந்தது. பேச முடியாத நிலையில் சிகிச்சை பெற்று இருந்தார். கம்பம் யூனியன் வங்கி அருகே எனது அண்ணன் மற்றும் 2 பேர் பைக்கில் சென்ற போது நாசர் அலி திடீரென பைக்கை திருப்பியதால் விபத்து ஏற்பட்டதாக கூறினார். பின்னர் 13ம் தேதி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

2) விபத்தில் இறந்த நபர் எனது தம்பி என்றால் சரிதான். மதுரை மருத்துவமனைக்கு மதியத்திற்கு பிறகு சென்றேன். நேரம் ஞாபகம் இல்லை. என்னுடன் எனது தங்கை, அப்பா வந்தார்கள். நான் சென்று பார்த்த போது அவசர சிகிச்சை பிரிவில் இருந்தார். விபத்திற்கு பிறகு ஜீவா, மற்றும் சௌந்தரபாண்டி எனது தம்பியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சொன்னார்கள். எனது தம்பி பயணித்த வாகனம் சுஜித்துக்கு சொந்தமானது அதற்கு காப்பீடு உள்ளது. எதிரிக்கும், இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றும், எனது தம்பி தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும், எதிரி மீது தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

/ஒம்/ A. இராமநாதன் B.A., B.L.,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.